DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **STC. NO.322/2018**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.7

Defence

Court

| | |
|---|---|
| Name | : வசந்த்குமார் |
| Father/ Husband Name | : ஜீவானந்தம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜர் .

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.06.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் அவசர பிரிவு மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். எனது மருத்துவமனையில் பணிபுரிந்த பாரத், ஆதித்யா ஆகியோர்கள் தற்போது எங்கு இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான் எனது மருத்துவமனையில் எனக்கு வழங்கிய அனுமதியின் அடிப்படையில் மருத்துவ சான்றின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2. கடந்த 19.03.2017ம் தேதி சாட்சி ரம்யா என்பவர் எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்துள்ளார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு மருத்தவர் சதீஸ்லால் அவர்கள் சிகிச்சை அளித்துள்ளார். அவருக்கு சாட்சி ரம்யாவிற்கு கீழ்க்கண்ட காயங்கள் இருந்துள்ளது. 1. இடது கால் முன்பகுதியில் 15x7 செ.மீ. அளவில் தோல் வறண்டும், தசைகள் தளர்ந்தும் காணப்பட்டது. 2. இடதுத்தொடை பகுதியில் சிராய்ப்பு காயம் இருந்துள்ளது. 3.

வலது தோள்பட்டையில் மற்றும் இடது முழங்கையில் சிராய்ப்பு காயம் இருந்துள்ளது. 4. வலது முட்டி மற்றும் வலது காலில் சிராய்ப்பு காயம்இருந்துள்ளது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை முடிவில் கடந்த 22.03.2017ம் தேதி விடுவிக்கப்பட்டுள்ளார். சாட்சி ரம்யாவிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கப்பட்டுள்ளது. **(சாட்சி ரம்யாவின் காயச்சான்று அ.த.சா.ஆ.4).**

**3.** அ.சா.1 கருப்பையா என்பவர் எங்கள் மருத்துவமனைக்கு கடந்த 19.03.2017ம் தேதி சிகிச்சைக்கு வந்துள்ளார். அவரை மருத்துவர் சதீஸ்லால் அவர்கள் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்துள்ளார். அசா.1ற்கு ஏற்பட்ட காயம் வலதுகையில் 3-5 வரையிலான விரல்களில் சிதைந்த காயம் இருந்துள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கப்பட்டுள்ளது. **(அ.சா.1 கருப்பையாவின் காயச்சான்று அ.த.சா.ஆ.5).**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. காயம்பட்ட நபர்களுக்கு மருத்துவ ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள காயங்கள் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாக சென்று ரோட்டில் இருந்த குழியில் எதிர்பாராமல் விழுந்து அங்கு ஏற்படும் பதற்றத்தால் வாகனம் இழுத்துகொண்டு சென்றால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. இருசக்கர வாகனம் ஓட்டிய நபருக்கு கீழே விழுந்து வேகமாக வாகனம் இழுத்துகொண்டு சென்றால் கைவிரலில் மருத்துவசான்றிதழில் குறிப்பிட்டுள்ளது போல் காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

2. இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்ற நபருக்கு வாகனம் கீழே விழுந்து இழுத்து சென்றபோது தொடையில் மருத்துவசான்றிதழில் குறிப்பிட்டுள்ளது போல் காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.